From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 194/2010

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : யாக்கியாகான் | Father/Husband Name | : முகமது மீரான் |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 18.12.2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2024.

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்).**

நான் தற்போது சொக்கலிங்கபுரத்தில் குடியிருந்து வருகிறேன். லாரி வைத்து தொழில் செய்து வருகிறேன். செல்லையா ஆசிரியருக்கு விபத்து ஏற்பட்டதாக எனக்கு தெரியும். அதற்குபின்பு எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **( அந்த கையெழுத்து மட்டும் அசாஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** சம்பவ இடத்தில் அன்றைய தினம் நானும் செல்வமும் இரவு 11.30 மணியளவில் சென்று கொண்டிருந்தபோது. போலிஸ் வேனில் சுமார் 3, 4 போலீசார்கள் பாண்டங்குடிக்கும் சொக்கலிங்கபுரத்திற்கும் இடையில் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது போலீசார் எங்களை மறித்து வரைபடம் தயார் செய்ய வேண்டி எங்களை சாட்சியாக கேட்டார்கள். நாங்கள் இருவரும் அங்கு நின்றோம். போலீசார் எங்கள் முன்னிலையில் படம் போட்டுக்கொண்டிருந்தார்கள். சம்பவ இடத்தில் வைத்து அதில் எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். நானும், செல்வமும் கையொப்பம் போட்டோம். போலீசார் எங்களை விசாரித்தார்கள்.

**( எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கபட்டது )**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை:**

விபத்தில் இறந்துபோன நபர் எனக்கு நன்கு தெரிந்த நபர் என்றால் சரிதான். எனது லாரி டிரைவருக்கு செலவிற்கு பணம் கொடுப்பதற்காக எனது இரு சக்கர வாகனத்தில் நானும் செல்வமும் பாண்டாங்குடி அன்றையதினம் இரவு 11.30 மணிக்கு

சென்றுகொண்டிருந்தோம். நான்தான் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றேன். நாங்கள் சம்பவ இடத்திற்கு போகும் முன்பே போலீசார் அங்கு இருந்தார்களா என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. படம் வரைந்து எழுதியதில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு அவ்வளவாக தெரியாது.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 194/2010

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வராஜ் | Father/Husband Name | : பெரியண்ணன் |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 18.12.2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2024.

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்).**

நான் தற்போது உதினிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். செல்லையா ஆசிரியருக்கு விபத்து ஏற்பட்டதாக எனக்கு தெரியும். அதற்குபின்பு எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **( அந்த கையெழுத்து மட்டும் அசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** சம்பவ இடத்தில் அன்றைய தினம் நானும், அசா4ம் இரவு 11.30 மணியளவில் சென்று கொண்டிருந்தபோது. போலிஸ் வேனில் சுமார் 3, 4 போலீசார்கள் பாண்டங்குடிக்கும் சொக்கலிங்கபுரத்திற்கும் இடையில் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது போலீசார் எங்களை மறித்து வரைபடம் தயார் செய்ய வேண்டி எங்களை சாட்சியாக கேட்டார்கள். நாங்கள் இருவரும் அங்கு நின்றோம். போலீசார் எங்கள் முன்னிலையில் படம் போட்டுக்கொண்டிருந்தார்கள். சம்பவ இடத்தில் வைத்து அதில் எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். நானும், அசா4ம் கையொப்பம் போட்டோம். போலீசார் எங்களை விசாரித்தார்கள்.

**( எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கபட்டது )**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை:**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் ஏழாம் வகுப்பு. என்னுடைய ஊர் உதினிப்பட்டி என்றால் சரிதான். எனக்கு முன்பு சாட்சியம் அளித்த அசா4ன் வீடு

எனக்கு தெரியும். அவர் எங்கள் ஊரில் பெண் எடுத்துள்ளார். நான் அசா4 உடன் தொழில் எதுவும் செய்யவில்லை. பொதுவாக அசா4 லாரி செட்டிற்கு நான் சென்று வருவது வழக்கம். அசா4ன் லாரி செட் பெயர் என்ன என்றால் சரியாக ஞாபகம் இல்லை. போலீசார் என்னிடம் சொல்லிகொடுத்த சங்கதியை நான் சாட்சியமாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும், அசா4ம் இருசக்கர வாகனத்தில் சென்றோம். அந்த வாகனம் அசா4க்கு சொந்தமானது. அதை அவர்தான் ஓட்டினார். நாங்கள் சென்றுகொண்டிருந்தபோது சம்பவ இடத்தில் போலீசார் நின்றுகொண்டிருந்தார்கள். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவிலலை. ஆனால் எங்களிடம் படம் வரைந்து எழுதியிருந்ததில் கையெழுத்து வாங்கினார்கள். என்ன எழுதியிருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் சம்பவ இடத்திற்கு இரவு 11.30 மணிக்கு செல்லவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் அதற்கான தடயங்கள் எதுவும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.